உ

விநாயகர் துதிப்பாடல்கள்



4477
Δ2,11 [illegible]
கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

மேலைச்சிவபுரி

ஸ்ரீ வினைதீர்த்த விநாயகர் கோவில்

மஹாகும்பாபிஷேக மலர்

நாள் : 10—2—89 வெள்ளிக்கிழமை

சா. செந்தில்நாதன்,
சாமிநாதன் செட்டியார் வீதி,
மேலைச்சிவபுரி-622 403.

உ



மேலைச்சிவபுரி

ஸ்ரீ வினைதீர்த்த விநாயகர் துதி

திருமுருக கிருபானந்தவாரியார்
வழங்கியது.

நேரிசை வெண்பா

செய்யபுகழ் மேலைச் சிவபுரியில் மேவுகின்ற
வெய்யவினை தீர்க்கும் விநாயகரை-வையமதில்
போற்றுவார் போதம் பொருந்துவார் புன்பிறவி
மாற்றுவார் வாழ்வார் மகிழ்ந்து.



ஔவையார் அருளிச் செய்த

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுது தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்

திருவடி வைத்து திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்குச நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னுவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்

தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டி
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத் தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

ஸ்ரீ விநாயகர் துதிப் பாடல்கள்

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்; —உருவாக்கும்;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
கோதலால் கூப்புவர்தம் கை.

—கபிலதேவர்

வானுலகும் மண்ணுலகும் வாழ! மறைவாழ!
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க!
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

—உமாபதிசிவம்

ஓதவினை அகலும் ஓங்கு புகழ்பெருகும்;
காதல் பொருள் அனைத்தும் கைகூடும் – சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள் – பெருந்தேவனார்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. —தேவாரம்

மதம்மூன்றும் ஆறுக வருங்களிற்று
முகத்தானை, மனத்தி லேதோன்
பதம்மூன்றும் அருந்தவர்க்குப் பதம்மூன்றும்
கடந்தபதம் பாலிப் பானை
விதம்மூன்று புரம்கடிந்தார் அளித்துஅருளும்
ஒருமுதலை, வேரோ டேசஞ்
சிதம்மூன்று பிறப்புஒழிக்கும் ஆனைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்.

—சைவஎல்லப்ப நாவலர்

தழைவிரி கடுக்கை மாலைத்
தனிமுதல் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற,
கோட்டது குறை என்றுஎண்ணிப்
புழைநெடும் கரத்தால் பற்றிப்

பொற்புடை இணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய
மலரடி சென்னி வைப்பாம். — ஆதிவீரராமபாண்டியன்

———

மும்மைப் புவனம் முழுதுஈன்ற
முதல்வி யோடும் விடைப்பாகன்,
'' அம்மை தருக முத்தம் '' என
அழைப் ', ஆங்கே சிறிது அகன்று,
தம்மில் முத்தம் கொள, நோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்,
செம்மை முளரி மலர்த்தாள், எம்
சென்னி மிசையில் புனைவாமே. —நந்திக்கலம்பகம்

——

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற்கு உழைத்தல்;
இமைப் பொழுதும்சோராது இருத்தல்; – உமைக்குஇனிய
மைந்தன், கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே! இம்மூன்றும் செய். —பாரதியார்

———

கணபதி கணபதி பாலயமாம் கௌரீ தனயா பாலயமாம்
கௌரீ நந்தன கஜவதனா கணேச வரதா மாம் பாஹி
கஜமுக கஜமுக கணநாதா கணேச வரதா மாம் பாஹி
கஜானனா ஓம் கஜவதனா கஜமுக வரதா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கர்ண கஜானனா விளம்பித ஸூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேச்வர புத்ரா கஜானனா
விக்ன விநாசக கஜானனா பாத நமஸ்தே கஜானனா
பக்தஜன ப்ரிய கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
பாஹி பாஹி கஜானனா பார்வதி நந்தன கஜானனா

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்தில்
அரச மரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார் 1

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர்
பக்தர் குறையைத் தீர்ப்பவர் 2

மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுந்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார் 3

ஆறுமுக வேலனுக்கு
அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார் 4

அவல் கடலை சுண்டலும்
அரிய மோதகங்களும்
கவலையின்றி தின்னுவார்
கருணைமாரி பொழிகுவார் 5

கலியுகத்து விந்தைகளைக்
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்

ப்ரபோ கணபதே பரிபூரண வாழ்வருள்வாயே (ப்ரபோ)

சார்ந்து வணங்கி துதி பாடியாடி உந்தன்
சன்னதி சரணடைந் தோமே
சாந்த சித்த சௌபாக்யம் யாவையும்
தந்தருள் சற்குரு நீயே (ப்ரபோ)

ஆதிமூல கணநாத கஜானன
அற்புத தவள சொரூபா
தேவ தேவ ஜய விஜய விநாயக
சின்மய பர சிவ தீபா (ப்ரபோ)

தேடி தேடி எங்கோ ஓடுகின்றார் உன்னைத்
தேடி கண்டு கொள்ளலாமே
கோடி கோடி மதயானைகள் பணி செய்ய
குன்றென விளங்கும் பெம்மானே (ப்ரபோ)

ஞான வைராக்ய விசார சார ஸ்வர
ராக லய நடன பாதா
நாம பஜன குண கீர்த்தன நவவித
நாயக ஜய ஜெகந் நாதா (ப்ரபோ)

பார்வதி பால அபார வரா வர
பரம பகவ பவ தரண
பக்த ஜன சுமுக ப்ரணவ விநாயக
பாவன பரிமள சரண (ப்ரபோ)

வினை தீர்க்கும் நாயகா
வேத விநாயகா
மனை போற்றும் நாயகா
மாணிக்க விநாயகா (வினை தீர்க்கும்)

ஞானப் பழம் பெற்றவா
ஞானம் மிக உற்றவா
யானை முகம் கொண்டவா
எந்தன் கலி தீர்க்கவா (வினை தீர்க்கும்)

வீதி தோறும் அமர்ந்தவா
வினை களைய ஓடி வா
ஜோதி வடிவம் ஆனவா
துதிகள் செய்தேன் ஓடி வா (வினை தீர்க்கும்)

பாடல் யாத்து அழைக்கிறேன்
பாதம் பணிந்து பிழைக்கின்றேன்
தேடித் தேடி அலைகின்றேன்
தினமும் என்னைக் காக்க வா (வினை தீர்க்கும்)

காரிய சித்தி மாலை

பந்த மகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ,
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி யிருந்து காக்குமோ,
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ,
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலக முழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள்எவன் அவ்
உலகிற் பிறங்கும் விகாரங்கள்

ஊருத மேலாம் ஒளியாவன்,
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன், அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணமடைகின்ளும், 2

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்,
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனுல் முடிவுறும், அத்
தடவு மருப்புக் கணபதி பொற்
சரணஞ் சரணமடைகின்ளும். 3

மூர்த்தி யாகித், தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தினுலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான்எவன், அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணமடைகின்ளும், 4

செய்யும் வினையின் முதல்யாவன்,
செய்யப் படுமப் பொருள்யாவன்,
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன்யாவன்,
உய்யும் வினையின் பயன் விளைவின்
ஊட்டி விடுப்பான் எவன், அந்த
பொய்யில் இறையாம் கணபதியைப்
புரிந்து சரணமடைகின்ளும். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன், விழுததகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன், விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்; எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியை புகழ்ந்து
சரணமடைகின்ரும். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன், நீரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்
தீயின் மூன்ருய்நவில்வான் எவன், வளியின்
என்னும் இரண்டு குணமாகி
இயைவான் எவன், வானிடைஒன்ரும்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணமடைகின்ரும். 7

பாச அறிவிற் பசு அறிவிற்
பற்றற் கரிய பரன்யாவன்,
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கு மவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணமடைகின்ரும். 8

இந்த நமது தோத்திரத்தை
யாவன்மூன்று தினம் மும்மைச்
சந்திகளில் தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபம்பெறும் எண்

தினம் உச்சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும். 9

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறை யோதில்
தங்கும் அரச வசிய மாம்
தயங்க இருபத் தொரு முறைமை
பொங்கும் உழுவலால் கிளப்பின்
பொருளின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார் 10

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலா தராவதம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் விநாஷிதேப தைத்யகம்
நதாஸுபாஸு நாஸகம் நமாமி தம் விநாயகம் 1

நதேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத்ஸுராரி நிர்ஜரம் நதாதிகாப துத்தரம்
ஸுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மஹேஸ்வரம் ஸமாஸ்ரயேபராத்பரம் நிரந்தரம் 2

ஸமஸ்த லோக ஸங்கடம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ர மக்ஷரம்
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யஸஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நவஸ்கரோமி பாஸ்வரம் 3

அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம்
ப்ரபஞ்ச நாஸ பூஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோல தான வாரணம் பஜே புராண வாரணம் 4

நிதாந்த காந்தி தந்த காந்தம் அந்தகாந்தகாத்மஜம்
அசிந்த்ய ரூப மந்தஹீன மந்தராய க்ருந்தனம்
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகினாம்
தமேக தந்தமேவ தம் விசிந்தயாமி ஸந்ததம் 5

[இதை தினமும் காலையில் (வெள்ளிக்கிழமை தவறாமல்) பக்தியுடன் படித்தால் விக்னம் நீங்கி ஆரோக்கம், கல்வி நீண்ட ஆயுள். நிறைய பொருள் கிடைக்கும்]

● ▲ ●

ஸ்ரீ கணாஷ்டகம்

ஏகதந்தம் மஹாகாயம் தப்த காஞ்சன ஸன்னிபம்
லம்போதரம் விசாலாக்ஷ வந்தேஹம் கண நாயகம் 1

மௌஞ்ஜீ கிருஷ்ணாஜினதரம் நாக யக்ஞோப வீதினம்
பாலேந்து விலஸன் மௌலிய வந்தேஹம் கண நாயகம் 2

அம்பிகா ஹ்ருதயானந்தம் மாத்ருபி- பரிபாலிதம்
பக்த ப்ரியம் மதோன்மத்தம் வந்தேஹம் கண நாயகம் 3

சித்ர ரத்ன விசித்ராங்கம் சித்ரமாலா விபூஷிதம்
சித்ர ரூபதரம் தேவம் வந்தேஹம் கண நாயகம் 4

கவக்த்ஜரம் ஸுர ச்ரேஷ்டம் கர்ண சாமர பூஜிதம்
பாசாங்குச தரம் தேவம் வந்தேஹம் கண நாயகம் 5

மூஷிகோத்தம் மாருஹ்ய தேவாஸுர மஹாஹயே
யோத்துகாமம் மஹா வீர்யம் வந்தேஹம் கண நாயகம் 6

யக்ஷ கின்னர கந்தர்வ ஸித்த வித்யாதரைஸ் ஸதா
ஸ்தூயமானம் மஹாத்மானம் வந்தேஹம் கண நாயகம் 7

ஸர்வ விக்னகரம் தேவம் ஸர்வ விக்ன விவர்ஜிதம்
ஸர்வ ஸித்திப் ப்ரதாதாரம் வந்தேஹம் கண நாயகம் 8

கணாஷ்டகம் இதம் புண்யம் பக்திதோ ய: படேந் நர:
விமுக்தஸ் ஸர்வ பாபேப்யோ ருத்ரலோகம் ஸ கச்சதி 9

[இதைப் பக்தியுடன் படித்தால் சகல பாபங்களும் விலகும். கேதுதசை கேதுபுத்தி காலத்தில் படித்தல் நலம்]

ஸ்ரீ விக்னேச்வர அஷ்டோத்தர சத நாமாவளி

[முதல் நாமாவைப் போலவே மற்ற எல்லா நாமாக்களுக்கு முன்பு 'ஓம்' என்றும் பின்பு 'நம:' என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.]

ஓம் விநாயகாய நம:
விக்னராஜாய
கௌரீபுத்ராய
கணேஸ்வராய
ஸ்கந்தாக்ரஜாய

ஓம் அவ்யாய நம:
பூதாய
தக்ஷாய
அத்யக்ஷாய
த்விஜப்ரியாய 10

ஓம் அக்னிகர்ப்பச்சிதே நம:
இந்த்ரச்ரீப்ரதாய
வாணீப்ரதாய
அவ்யயாய
ஸர்வஸித்திப்ரதாய
சர்வதனயாய
சர்வரீப்ரியாய
ஸர்வாத்மகாய
ஸ்ருஷ்டிகர்த்ரே
தேவாய 20
அநேகார்சிதாய
சிவாய
சுத்தாய
புத்திப்ரியாய
சாந்தாய
ப்ரஹ்மசாரிணே
கஜானனாய
த்வைமாத்ரேயாய
முனிஸ்துத்யாய
பக்த விக்ன விநாசகாய 30
ஏகதந்தாய
சதுர்பாஹவே
சதுராய
சக்திஸம்யுதாய
லம்போதராய
ஸூர்பகர்ணாய
ஹரயே
ப்ரஹ்மவிதுத்தமாய
காலாய
க்ரஹபதயே 40
காமினே

ஓம் ஸோம ஸூர்யாக்னி
லோசனாய நம:
பாசாங்குசதராய
சண்டாய
குணாதீதாய
நிரஞ்சனாய
அகல்மஷாய
ஸ்வயம்ஸித்தாய
ஸித்தார்ச்சித
பதாம்புஜாய
பீஜபூர பலாஸக்தாய 50
வரதாய
சாச்வதாய
க்ருதினே
த்விஜப்ரியாய
வீதபயாய
கதினே
சக்ரிணே
இக்ஷுசாபத்ருதே
ஸ்ரீதாய
அஜாய 60
உத்பலகராய
ஸ்ரீபதயே
ஸ்துதிஹர்ஷிதாய
குலாத்ரிபேத்ரே
ஜடிலாய
கலிகல்மஷநாசகாய
சந்த்ரசூடாமணயே
காந்தாய
பாபஹாரிணே
ஸமாஹிதாய 70

ஓம் ஆச்ரிதச்ரீகராய நம:
ஸௌம்யாய
பக்தவாஞ்சித-தாயகாய
சாந்தாய
கைவம்யஸுகதாய
ஸச்சிதானந்தவிக்ரஹாய
ஜ்ஞானினே
தயாயுதாய
தாந்தாய
ப்ரஹ்மத்வேஷ
விவர்ஜிதாய 80
ப்ரமத்ததைத்ய பயதாய
ஸ்ரீ கண்டாய
விபுதேச்வராய
ரமார்ச்சிதாய
விதயே
நாகராஜ யஞ்ஞோப
வீதகாய
ஸ்தூலகண்டாய
ஸ்வயம்கர்த்ரே
ஸாமகோஷப்ரியாய
பரஸ்மை 90

ஓம் ஸ்தூலதுண்டாய நம:
அக்ரண்யே
தீராய
வாகீசாய
ஸித்திதாயகாய
தூர்வாபில்வப்ரியரய
அவ்யக்த மூர்த்தயே
அற்புத-மூர்த்திமதே
சைலேந்த்ர-
தநுஜோத்-ஸங்க-
கேலநோத்ஸுக-
மானஸாய
ஸ்வலாவண்ய
ஸுதாஸாராய 100
ஜிதமன்மத விக்ரஹாய
ஸமஸ்த ஜகதாதாராய
மாயினே
மூஷிகவாஹனாய
ஹ்ருஷ்டாய
துஷ்டாய
ப்ரஸன்னாத்மனே
ஸர்வஸித்திப்ரதாயகாய

ஓம் நானாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

மாற்றரிய பிறவியெனும் மறிகடலில் வீழ்ந்தவர்கள்
போற்றரிய திருவடியாம் புணைபற்றி நின்றவுடன்
சாற்றரிய முத்தியெனும் தடங்கரையில் உய்ப்பதற்குக்
காற்றெறியும் தழைசெவிய கடாக்களிற்றைப்
பணிகுவமால்.

திருப்புகழ்

(ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளியது)

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரண்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெமானே

KOVILUR MADALAYAM